த.வெ.க. அரசு தொடர்ந்து கடன் வாங்குவதால் அச்சம்

அரசு ஊழியர்கள் விருப்ப ஓய்வு கேட்டு அதிகளவில் விண்ணப்பம்!

சென்னை, நவ. 7 - த.வெ.க. அரசு தொடர்ந்து கடன் வாங்குவதால், அச்சம் அடைந்துள்ள அரசு ஊழியர்கள், விருப்ப ஓய்வு கேட்டு, அதிகளவில் விண்ணப் பித்து வருவதாக, தகவல் வெளியாகி உள்ளது.

தமிழக அரசு துறைகளில் ஒன்பது லட்சத்திற்கும் அதிகமான அரசு ஊழியர்கள் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு ஊதியம் உள்ளிட்ட சலுகைகள், மனிதவள மேலாண் மைத் துறை வாயிலாக வழங்கப் படுகின்றன. அரசு ஊழியர்களின் ஓய்வு வயது 60 ஆகும். பல்வேறு துறைகளில், ஊழியர்கள் பற்றாக்குறை உள்ளதால், தற்போது பணிபுரிவோருக்கு, கூடுதல் பணிச்சுமை ஏற்பட்டுள்ளது. அரசுத் துறைகளில் மூன்று லட்சம் பணியிடங்களை நிரப்ப வேண்டியுள்ளது.

ஆனால், அரசின் நிதி நெருக்கடி காரணமாக, காலி பணியிடங்களை நிரப்புவதில் சிக்கல் நிலவுகிறது.

கடந்த தி.மு.க., ஆட்சியில், மார்ச் மாத நில வரப்படி, அரசின் கடன் சுமை 10 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது. த.வெ.க., அரசு பொறுப்பேற்ற பின், கடந்த மே மாதத்தில் இருந்து, ஜூன் வரை, 20 ஆயிரத்து 881 கோடி ரூபாய் கடன் பெறப்பட்டது. அக்டோபர் மாதம் வரை கடன் பெறுவது, இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாக நிதித்துறை கூறியுள்ளது.

எனவே, கடன்சுமை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால், அரசு ஊழியர்களுக்கான பென்ஷன் உள்ளிட்ட பணி ஓய்வு பலன்கள் கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. பணிச்சுமை உள்ளிட்ட காரணங்களால், விருப்ப ஓய்வில் செல்ல விருப்பம் தெரிவித்து அரசிடம் மனு கொடுப்போர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

விருப்ப ஓய்வில் செல்வதற்கான மனு கொடுத்து, 90 நாட்களுக்கு பின்னரே, அந்த மனு மீது நடவடிக்கை எடுக்கப்படும். அதுவரை மனுவை திரும்பப் பெற அவகாசம் வழங்கப்படும். தலைமைச் செயலகத்தில் மட்டும், நீர்வளத்துறை கூடுதல் செயலர் தொடங்கி, 25க்கும் மேற்பட்டோர் விருப்ப ஓய்வு கேட்டு மனு அளித்துள்ளனர்.

மாநிலம் முழுவதும் நூற்றுக்கணக்கானோர் மனு அளித்துள்ளனர். பணிச்சுமை, பழைய ஓய்வூதிய திட்டம் செயல்படுத்தாதது, அரசின் நிதி நிலைமை உள்ளிட்ட காரணங்களால், பலரும் அரசு பணியிலிருந்து வெளியேற விரும்பும் நிலையில், புதிதாக ஆட்களை தேர்வு செய்ய முடியாது என்பதால், அரசு ஊழியர்களின் ஓய்வு வயதை உயர்த்த, அரசு ஆலோசித்து வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி: காங்கிரஸ் அமைச்சர் விஸ்வநாதன் இப்பல்லாம் த.வெ.க. காரர் மாதிரியே அடிக்கடி பேட்டி தர்றாரே.

பட்டணம் : **ஆமாமய்யா; அவர் த.வெ.க.வுக்கு ஓவரா 'ஜால்ரா' அடிக்கறதை பார்க்க முடியுது. விஜய் 'ரோட் ஷோ'வுக்கு கூட்டம் சேரலைன்னா காலேஜிக்கு லீவு விடச் சொல்லி, மாணவ, மாணவிகளை கூட்டத்தை காண்பிக்க அனுப்பி வைப்பாராம். இதுக்குப் பேர்தான் பதவி படுத்தும் பாடுங்கறது.**

கழக இளைஞர் அணி செயலாளர் - எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. தொழிலாளர் அணி சார்பில் கழக கொடியேற்று விழா - நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி!

மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கழக கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை!

குமரி, நவ. 7 - தி.மு.க. மாநில இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 வது பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் கழக கொடியேற்று விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் E.N.சங்கர் தலைமையில் 05.11.2026, வியாழக் கிழமை அன்று மாலை 6.30 மணியளவில் மாதவலாயம் ஊராட்சி, சோழபுரம் பகுதியில் வைத்து நடைபெற்றது.



நிகழ்ச்சியில் மாவட்டத் தொழிலாளர் அணி செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க துணைச் செயலாளர் A.R.பூதலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் S.K.ரஹ்மான், கழக முன்னோடிகள் வ.இளங்கோ, P.பாரூக், மாவட்ட பிரதிநிதிகள் ச.கல்யாண சுந்தரம், S.இம்மானுவேல், C.காந்தி, தோவாளை கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் சொ.சீனிவாசன், R.ராஜபாபு, C.ராஜா ரமணன், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் பூ.சிதம்பரம், ராஜேஷ், செ.சரவணன், M.ஆஸ்டின் பெனட், M.ஜலீல், P.சரத், பீ.எம்.சேக் முஹம்மது, ராஜேஷ் ரெத்தினமணி, சலீம் தேவராஜ், C.ஆண்டார் பிள்ளை, சுரேஷ், கழக நிர்வாகிகள் K.முருகன், V.வள்ளுவன், I.ஆசீர்பாலன், மகேஷ், V.பேரின்பதாஸ், S.தேவதாஸ், S.வரம்பெற்றான், N.கணேசன், இளைய பெருமாள், முத்துராஜ் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

விண்ணை முட்டும் அரிசி விலை உயர்வால் மக்கள் கடும் பாதிப்பு! அரசு வழங்கும் சொற்ப பணத்தில் அரிசி வாங்க முடியாமல் திணறல்

மீண்டும் ரேஷன் கடை மூலம் தரமான அரிசி வழங்க வேண்டும்!

புதுச்சேரி அரசுக்கு அமைப்பாளர் இரா.சிவா வலியுறுத்தல்!



புதுச்சேரி, நவ. 7 – புதுச்சேரி மாநிலத்தில் அதிகரித்து வரும் அரிசி விலையேற்றத்தால் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டு உள்ள பொதுமக்களுக்கு வங்கிக் கணக்கில் சொற்பத் தொகையை செலுத்துவதை தவிர்த்து, மக்களுக்கு தேவையான தரமான அரிசியை நேரடியாக வழங்க புதுச்சேரி அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் புதுச்சேரி மாநில திமுக வலியுறுத்தி உள்ளது.

இது தொடர்பாக மாநில திமுக அமைப்பாளரும், மேனாள் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது: –

புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி அவர்களின் அரசு, நிலுவையில் இருந்த 6 மாதங்களுக்கான இலவச அரசிக்கு பதிலாக பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் பணத்தை வரவு வைத்துள்ளதாக அறிவித்துள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்பு விலைவாசியின் அடிப்படையில் ரூ. 43க்கு ஒரு கிலோ அரிசி ரேஷன் கடைகள் மூலம் வழங்கப்பட்டது. பின்னர் ரேஷன் அரிசியில் ஊழல் நடந்ததால் அரிசிக்கு பதில் பணம் வழங்கப்படுகிறது. தற்போதைய வெளிச்சந்தையில் ரூ. 80 முதல் ரூ. 100 வரை அரிசி விலையும், அத்தியாவசியப் பொருட்களின் விலையும் விண்ணைத் தொடும் அளவிற்கு அதிகரித்துள்ளதை அரசு கவனத்தில் கொள்ளாமல் இருப்பது வருத்தம் அளிக் கிறது. விலைவாசி உயர்வை அரசு கட்டுப்படுத்த தவறியதால் ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதித்துள்ளது.

இத்தகைய மிகக் கடுமையான விலைவாசி உயர்வுக்கு இடையில், அரசு வழங்கும் இந்த மிகக் குறைந்த தொகை பொதுமக்களின் ஒரு வாரக் காலத் தேவைக்கு கூடப் போதுமான தாக இருக்காது. அதனால்தான் எதிர்க் கட்சிகள் அரிசி விநியோ கத்தை முழுமையாக நிறுத்திவிட்டு, பணமாக வழங்குவது ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களின் வாழ்வாதாரத்தை பறிக்கும் செயல் என்றும் இது ஏழை மக்களுக்கான அரசு இல்லை என்றும் தொடர்ந்து குற்றம் சுமத்தி வருகிறது.

மக்களுக்கு இலவசமாக அரிசி வழங்கினால் ஆண்டுதோறும் விலைவாசி அதிகரிப்புக்கு ஏற்ப டெண்டர் மாற்றி அமைக்கப்படும். ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட முடிவின் அடிப் படையில் டெண்டர் விடப்படுவதால் அதை எடுப்பவர்களும் விலைவாசி உயர்வால் எடுத்த டெண்டரை ரத்து செய்து விடுகின்றனர். இதனால் அரிசி காலத்தோடு கிடைக்காமல் மக்கள் ஏமாற்றம் அடைகின்றனர். மேலும், அதிகரித்து வரும் அரிசி விலையேற்றத்தால் பொதுமக்கள் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டு உள்ளனர் என்பதை அரசு உணர வேண்டும்.

சென்ற பாராளுமன்றத் தேர்தலில் பரப்புரைக்குச் சென்ற முதல்வர் ரங்கசாமியை கிராமந்தோறும் மக்கள் முற்றுகையிட்டு ரேஷனில் அரிசி போட வேண்டுமென்று முழக்கமிட்ட போது, இனி கட்டாயம் அரிசி போடுவேன் என்று வாக்குறுதி அளித்த முதல்வர் ரங்கசாமி இவ்வாண்டு துக்கம் முதல் அரிசி போடுவதை நிறுத்தி உள்ளது அந்த மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறிய செயலாகும்.

ஆகவே, புதுச்சேரி அரசு ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களின் வாழ்வாதாரத்தை கணக்கில் கொண்டு, வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் முறையைக் கைவிட்டு, நியாயவிலைக் கடைகள் மூலமாக தரமான அரசியை மக்களுக்கு நேரடியாக வழங்க வேண்டும். அப்படிச் செய்தால் மக்களும், வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் ரேஷன் கடை ஊழியர்களும் பயன்பெறுவார்கள். ஒரு வேளை நிர்வாகக் காரணங்களால் அரிசி வழங்கத் தாமதமானால், தற்போதைய கடுமையான விலைவாசி அதிகரிப்புக்கு ஏற்ப விலையை ஒட்டி கூடுதல் தொகையை மக்கள் வங்கிக் கணக்குகளில் உடனடியாக செலுத்த வேண்டும். மேலும் தற்போது மார்ச் முதல் ஆகஸ்ட் வரையிலான பணம் செலுத்தும்போது மீத முள்ள செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதத்திற்கான பணத்தையும் சேர்த்து வழங்கினால் தீபாவளி பண்டிகையை கொண்டாட உள்ள மக்களுக்கு பேருதவியாக இருக்கும் என்பதை இந்த அரசுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல், இந்த ஆண்டுக்கான தீபாவளி தொகுப்பாக குடும்ப அட்டை தாரர்களுக்கு சூரியகாந்தி சமையல் எண்ணெய் 2 லிட்டர், சர்க்கரை 2கிலோ, கடலைப் பருப்பு 1 கிலோ, ரவை மற்றும் மைதா தலா அரை கிலோ என ரூ. 700 மதிப்புள்ள 5 பொருட்கள் வழங்கப்படும் என்று அறிவிப்பு செய்து, அதற்கான பணிகள் வழக்கம்போல் கதிர்காமம், தட்டாஞ்சாவடி, இந்திரா நகர் தொகுதிகளில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மீதி உள்ள தொகுதிகளில் இன்னும் தீபாவளி தொகுப்பு வழங்கும் பணி தொடங்கப் படவில்லை. தீபாவளி பண்டிகைக்கு இன்னும் ஒரு தினமே உள்ள நிலையில் அனைத்து ரேஷன் கடைகளுக்கும் தீபாவளி தொகுப்பு செல்லாமல் இருப்பதற்கு என்ன காரணம்?. கடந்த ஆண்டு தீபாவளிக்கு வழங்கிய தொகுப்பு பொங்கல் பண்டிகை வரை கொடுக்கப்பட்டது. இந்தாண்டும் அதே நிலை தொடருமா? என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். அரசு தீட்டும் திட்டத்தை உடனடியாக செயல்படுத்தாமல் காலம் தாழ்த்துவது யார்?. இரட்டை என்ஜின் அரசில் யாருக்கு அதிகாரம் என்ற போட்டி இன்னும் தொடர்கிறதா? அரசு உத்தரவிட்டும் அதிகாரிகள் காலதாமப்படுத்துகிறார்களா? அப்படி என்றால் அதிகாரி கள் மீது ஏன் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. எப்பொழுதும்போல் முதல்வர் அலட்சியமாக இருக்கக் கூடாது. பண்டிகைக்கு வழங்கப்படும் பொருட்கள் காலத்தோடு மக்களைச் சென்றடையச் செய்ய வேண்டும் என்பதே எங்களின் எண்ணம். ஆகவே, தீபாவளி தொகுப்பு காலத்தோடு மக்களுக்கு கிடைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அ.பொ. அரசு
நவம்பர் 7 (1987)



தி.மு.க. சென்னை மாநகராட்சி மன்றத்தை கைப்பற்றியபோது தி.மு.க.வின் முதல் மேயராக பொறுப்பேற்று பணியாற்றியவர்.

20 ஆண்டுகாலம் மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – 1967ஆம் ஆண்டு மாதவரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

1958ஆம் ஆண்டு நடைபெற்ற கருப்புக் கொடி போராட்டத்திலும், 1962ஆம் ஆண்டு விலைவாசி உயர்வை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்திலும் கலந்து கொண்டு சிறை சென்றார்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(6.11.2026)



1. கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே சப்படி கிராமத்தில், மது அருந்தும் போது ஏற்பட்ட தகராறில் வாலிபர் கத்தியால் குத்தித் கொலை ....

2. திண்டுக்கல் மாவட்டம் இரண்டெலைப் பாறையில் பெண் அடித்துக்கொலை. பிணத்தை தார் சாலையை தோண்டி புதைத்த கணவன் ...

3. சென்னை அயனாவரம் அருகே தெருவில் விளையாடிக் கொண்டிருந்த மூன்று வயது சிறுமியிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட 17 வயது சிறுவன் சிக்கினான் ...

4. ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் அருகே வியாபாரி வீட்டில் 40 சவரன் நகை, 1கிலோ வெள்ளி பொருட்கள் மற்றும் ரூ.1 லட்சம் (பணம்) திருட்டு....

5. திருவாரூர் மாவட்டம் கோட்டூர் அருகே ஓய்வு பெற்ற அரசு பள்ளி ஆசிரியர் வீட்டில் 160 பவன் நகை மற்றும் பத்தாயிரம் ரூபாய் ரொக்கப் பணம் கொள்ளை....



6. சென்னை மயிலாப்பூர் காரனீஸ்வரர் கோயில் தெருவில் ஓய்வு பெற்ற வருவாய் துறை பெண் அதிகாரி வீட்டில் பூட்டை உடைத்து 44 சவரன் நகை மற்றும் 15 லட்ச ரூபாய் பணம் திருட்டு....

7. திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு அருகே ரெட்டி பாளையத்தில் அரசு பள்ளி பீரோவை உடைத்து ஆவணங்கள் திருட்டு ...

8. சென்னையை அடுத்த செங்குன்றம் பேருந்து நிலையம் அருகே அரிவாளை எடுத்து போலீஸை வெட்ட துரத்திய போதை ஆசாமி ....

9. சென்னை கொளத்தூர் அருகே ஜி.கே.எம். காலனியில் உள்ள மதுபானக் கூடத்தில் குடிபோதையில் பீர் பாட்டிலை உடைத்து ரகளை செய்த இளம்பெண், குடிமகன்கள் அலறியடித்து ஓட்டம் ...

10. காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே போதைப் பொருள் தடுப்பு சோதனை என்ற பெயரில் வடமாநில வாலிபர்களை மிரட்டி பணம் பறித்த போலீசார் ....



11. காசிமேட்டில் இருந்து மீன் பிடிக்க ஆந்திரக் கரையோரம் சென்ற காசிமேடு மீனவர்கள் ஏழு பேர் கடலில் மூழ்கி இறப்பு, காசிமேடு கண்ணீர் கடலில் மூழ்கியது, உரிய நடவடிக்கை எடுக்காத மீன்வளத் துறையை கண்டித்து போராட்டம் ...

12. வானகரம் காவல் நிலையத்திலிருந்து வழிப்பறிவழக்கில் பிடிபட்டு விசாரணைக்கு அழைத்து வந்த சிறுவன் காவல் நிலையத்தில் இருந்து தப்பி ஓட்டம் ....

13. திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர், காட்டூர், திருப்பாலைவனம், சாத்தங்காடு, செங்குன்றம் ஆகிய பகுதிகளில் தடை செய்யப்பட்ட கஞ்சா, போதை மருந்து குட்கா , உள்ளிட்ட பொருட்கள் விற்பனை படுஜோர், 27 ஆயிரம் கிலோ குட்கா, 33 கிலோ கஞ்சா, 150 போதை மாத்திரைகள் சிக்கின...

14. திருவொற்றியூர் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் மீது உதவியாளர் புகார், சம்பளப் பணத்தை கேட்டால், திரிஷாவுக்கு சிலை வைக்க போவதால் தர மறுப்பதாக குற்றச்சாட்டு ...

15. திண்டுக்கல் மாவட்டம் நாகைய கவுண்டன் பட்டியில் செங்கல்சூளை தொழிலாளி லட்சுமணன், 4 பேர் கொண்ட கும்பலால் வெட்டி படுகொலை

16. திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே, நிம்மியம்பட்டு கிராமத்தில் மது அருந்தும் போது ஏற்பட்ட தகராறில், அனுமுத்து என்ற இளைஞர் கல்லால் தாக்கி கொலை ...



17. திருநெல்வேலி பாளையங்கோட்டையில் சாம் சாலமன் பிரபாகர் எனும் இளைஞர் ஓட ஓட விரட்டி அரிவாளால் வெட்டிப் படுகொலை ...

18. திருவண்ணாமலை மாவட்டம் செங்கம், அதன் சுற்றுவட்டார பகுதிகளில், தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகள் விற்பனை அமோகம் ...

19. புதுக்கோட்டையில் முதலமைச்சர் விஜயின் வருகைக்காக, பாதுகாப்பு பணிக்குச்சென்ற பெண் தலைமைக் காவலருக்கு பாலியல் தொல்லை... ●